தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, ஆனி 20, திருவள்ளுவர் ஆண்டு 2050

2019 ஜூலை 5, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை."

கிடைத்த உணவைப் பலருக்கும் கொடுத்து, தானும் உண்டு, அனைத்து உயிர்களையும் காப்பாற்றுதல் நீதி நூல்கள் கூறுகின்ற அறங்கள் அனைத்திலும் மிக உயர்ந்ததாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

41—

சமுதாயக் கூடம்

***8769—திருமதி பி. கீதா ஜீவன்:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி தொகுதி, தூத்துக்குடி மாநகராட்சி, 3–வது வார்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதியில் உள்ள சமுதாயக் கூடத்தை பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தொகுதி, தூத்துக்குடி மாநகராட்சி, 3–வது வார்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதியில் உள்ள சமுதாயக் கூடம் வாரியத்தின் விற்பனைக்குரிய பகுதியாகும். அதனை விற்பனை செய்திட, விற்பனை விலை நிர்ணயம் செய்யப்பட்டு, பொது ஏல முறையில் விற்பனை செய்திட முடிவு செய்யப்பட்டு, 9–5–2018 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில், சமுதாயக் கூடத்தை ஏலம் எடுக்க யாரும் கலந்துகொள்ளவில்லை. தற்போது இக்கட்டடம் பயன்படுத்த தகுதியற்ற நிலையில் இருப்பதைக் கருத்தில்கொண்டு, இக்கட்டடத்தினை இடிப்பது குறித்து வல்லுநர் குழு ஒன்றின்மூலம் ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கையை வாரியம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே நிலையில்தான் எட்டயபுரம் ரோடு Housing Board Colony–ல் உள்ள திருமண மண்டபமும் இருக்கிறது. அதற்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் தூத்துக்குடி தொகுதியில், அதே வார்டு பகுதியில் உள்ள ராஜீவ் நகர், பாக்கியலஷ்மி நகர் ஆகிய பகுதிகளில் சர்வே எண் 489, 492, 492/1B, 501/1, 502/2 ஆகிய எண்களில் மொத்தம் 320 plots இருக்கின்றன. அவற்றில், 250 குடியிருப்புகளில் கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் குடியிருந்து வருகிறார்கள். அந்தக் குடியிருப்புகளில் E.B. connection உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் அரசு செய்து கொடுத்திருக்கிறது. ஆனால், அதற்கு பட்டா வாங்குவதற்காக விண்ணப்பித்தபோது, அந்த இடத்தை வீட்டு வசதி வாரியம் எடுக்கப்போவதாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது எனவும், அதனால் பட்டா வழங்க இயலாது என்றும் வருவாய்த் துறையினர் மறுத்துவிட்டார்கள். வீட்டு வசதி வாரியம்மூலம் அந்த இடம் அறிவிக்கை செய்யப்பட்டதோடு

2019 ஜூலை 5]

நின்றுவிட்டது. ஆனால், எடுக்கவில்லை. அதற்கு தடையில்லாச் சான்று வழங்கப்படுமாயின், அந்தக் குடியிருப்புகளுக்கு வருவாய்த் துறைமூலம் வீட்டுமனைப் பட்டா பெற்றிட முடியும். ஆகவே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வீட்டு வசதி வாரியம்மூலம் மேற்கண்ட இடங்களில் உள்ள சர்வே எண்களுக்கு தடையில்லாச் சான்று வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணை வினா மூலமாக எட்டயபுரம் ரோட்டில் உள்ள ராஜீவ் நகர், பாக்கியலஷ்மி நகர் ஆகிய பகுதிகளுக்கு NOC தரப்படுமா என்றும், பட்டா வழங்கப்படுமா என்றும் கேட்டிருக்கிறார்கள். இது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாதது என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NOC வழங்கப்படாதது நீண்ட காலப் பிரச்சினையாக இருப்பதால் கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது அங்குள்ள மக்கள் தேர்தல் புறக்கணிப்பு போன்ற பல்வேறு போராட்டங்களை நடத்தினார்கள். ஆகவே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி, இதனை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்வியில் கேட்டதுபோல இன்னும் பல பகுதிகளில் இந்தப் பிரச்சினை இருக்கிறது. இந்தப்*

பிரச்சினை குறித்து ஏற்கெனவே என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதேபோன்று இன்னொரு சமுதாயக் கூடம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே, சங்கரபேரி என்ற இடத்தில் இருக்கக்கூடிய இந்தச் சமுதாயக் கூடம் உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 29.46 ஏக்கர் நிலத்தில் மனை மேம்பாட்டுத் திட்டத்தில் 1989 ஆம் ஆண்டு நகரமைப்புத் துறையின்மூலம் ஒப்புதல் பெற்று, 1992 ஆம் ஆண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1,055 குடியிருப்பு மனைகள், வணிக மனை, பள்ளி மனை மற்றும் சமுதாயக் கூட மனை என பல்வேறு பயன்பாட்டு மனைகளுடன் செயல்படுத்தப்பட்டது. அதில் 1,055 குடியிருப்பு மனைகளும் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுவிட்டன. 8,789 சதுர அடி பரப்பில் கடை மனையும், 24,530 சதுர அடி பரப்பில் ஆரம்பப் பள்ளி மனையும், 14,707 சதுர அடி பரப்பளவு கொண்ட சமுதாயக் கூட மனையில்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தச் சமுதாயக் கூடம் அமைந்திருக்கின்ற இடம் 14,707 சதுர அடி பரப்பளவு—2,152 சதுர அடி பரப்பளவு கொண்ட சமுதாய நலக் கூடமும், 15,164 சதுர அடி பரப்பளவு கொண்ட வணிக மனையில் 2,152 சதுர அடி பரப்பளவு கொண்ட வணிக வளாகக் கட்டடமும் கட்டப்பட்டது.

இத்திட்டத்தைச் செயல்படுத்தியபோது, இந்த இடம் சங்கரபேரி ஊராட்சி வசம் இருந்தது. பின்பு தூத்துக்குடி மாநகராட்சியோடு சேர்க்கப்பட்டது. இந்தச் சமுதாயக் கூடத்தை அப்போது நிதிச் சுமை காரணமாக சங்கரபேரி ஊராட்சி அமைப்பு வாங்கிக்கொள்ள முன்வரவில்லை. பின்னர், அரசாணை 419, நாள் 11–10–2000–ன்படி வாரியமே அதை விற்பனை செய்து கொள்ளலாம் என்ற ஆணைக்கேற்ப, வாரியத்திற்கான நிதி இழப்பினைத் தவிர்க்க வாரியமே அப்போது சமுதாயக் கூடத்தினை விற்பனைக்குக் கொண்டுவந்தது.

கடந்த ஆண்டு வரை பல்வேறு கால கட்டங்களில் ஏழு முறை ஏல முறையில் விற்பனை செய்ய வாரியத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஏலம் எடுக்க யாரும் முன்வரவில்லை. இந்தச் சூழ்நிலையில்தான் கடைசியாக, சென்ற ஆண்டு, அதாவது 2018 ஆம் ஆண்டு வாரியத்தால் விற்பனை செய்ய ரூ.1.34 கோடி என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டு, 9–5–2018 அன்று ஏலம்

2019 ஜூலை 5]

நடத்துவதற்கான விளம்பரங்கள் வழங்கப்பட்டன. அப்போதும், ஏலத்தில் யாரும் பங்கேற்காததால் வாரியத்தால் சமுதாயக் கூடத்தை விற்பனை செய்ய இயலவில்லை.

இச்சமுதாயக் கூடம் மற்றும் வணிக மனை கட்டடங்கள் கட்டப்பெற்று, பல வருடங்கள் ஆனதால், தற்போது பயன்படுத்த தகுதியற்ற நிலையில் உள்ளதைக் கருத்தில்கொண்டு, இதனை இடித்துவிட்டு, மனையை ஏல முறையில் விற்பனை செய்யலாமா அல்லது புதிய கட்டடம் கட்டி வேறு பயன்பாட்டிற்குக் கொண்டு வரலாமா என்பது குறித்து மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களின் கருத்துகளைக் கேட்டு, பரிசீலனை செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ஒரு நல்ல முடிவை கூடிய விரைவில் எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு சமுதாயக் கூடத்தின் நிலையைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அதற்கும் ஆலோசனைசெய்து, ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அவர் முன்பு வைத்த பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் இம்மாதிரியான விஷயத்தில் கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே தமிழகத்திலே சிறப்பான நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியில் நெருப்பெரிச்சல் பகுதியில் கிட்டத்தட்ட 13 ஏக்கர் பரப்பில் 110 கோடி ரூபாயில் 1,750 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. அந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளின் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் குடியேற உள்ளார்கள். அந்தப் பகுதியிலே அந்த மக்களின் தேவைக்கேற்ப சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்

வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகுமார் அவர்கள் கேட்ட அந்த சமுதாயக் கூடம் பற்றி வாரியத்தினிடம் ஆலோசனை செய்து, உரிய முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

42—

பகுதிநேர நியாய விலைக் கடை

***45144—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், கார்மாங்குடி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, கார்மாங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் கார்மாங்குடி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 370 குடும்ப அட்டைகளையும் சேர்த்து, 715 குடும்ப அட்டைகளுடன் கார்மாங்குடி முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. கார்மாங்குடி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கும்பட்சத்தில், தாய்க் கடையில் 345 குடும்ப அட்டைகள்